

வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரகுமான் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில், சமுதாய வளைகாப்பு விழாவினை துவக்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசையினை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் கே.எஸ். மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், நகர் மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் பழனி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் திருப்பத்தூரிலிருந்து திருமயம் மற்றும் திருப்பத்தூரிலிருந்து காரைக்குடி ஆகிய வழித்தடங்களுக்கான புதிய 02 நகர பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு, கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பொது மேலாளர் கந்தசாமி, துணை மேலளார் (வணிகம்) நாகராஜன், கிளை மேலாளர் தனபால், திருப்பத்தூர் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சண்முகவடிவேல் மற்றும் போக்குவரத்துத்துறையைச் சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் உள்ளனர்.

### மக்களுக்காகப் பணியாற்றும்

# அதிகாரிகள் அடையாளம் காணப்பட வேண்டும்!

## புதுச்சேரி சட்டப் பேரவையில் இரா.சிவா பேச்சு!

பாண்டிச்சேரி, மார்ச் 19 -

புதுச்சேரி சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சிவா நேரமில்லா நேரத்தில் பேசுகையில், மக்களுக்காக பணியாற்றும் அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று வலியுறுத்தினார்.



அவர் பேசியது வருமாறு:

மாநிலத்தின் உள்துறையை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அமைச்சர் அவர்கள், காவல் துறையின் நிர்வாக சீர்கேட்டை களைய வேண்டும். மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் காவல் துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை இந்த அவைக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

புதுச்சேரி காவல் துறையில் அதிகபடியான எஸ்.பி-க்கள் இருந்தும் ஒரு சில எஸ்.பி-க்களுக்கு மட்டும் கூடுதல் பொறுப்புகள் ஒதுக்கப்படுவதால் அவர்களுக்கு பணிச் சுவை அதிகரித்து மனஉளச்சலுக்கு ஆளாவதுடன், எந்த பணியையும் சரிவர செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

ஏற்கனவே, கொலை சம்பவம், வெடிகுண்டு கலாச்சாரம், கஞ்சா விற்பனை போன்றவற்றால் தலைகுனிந்து நிற்கும் காவல் துறையில் இதுபோன்ற சில கருப்பாடுகளின் செயல்பாடுகள் ஒட்டுமொத்த காவல் துறைக்கே களங்கத்தை ஏற்படுத்துகிறது.

தமிழர்கள் மீது அக்கறை கொண்ட தமிழ்வழி வந்த சில அதிகாரிகள் மட்டுமே தம் கடமையை சிறப்பாக செய்து வருகின்றனர். தமிழ் தெரியாத அதிகாரிகள் புதுச்சேரி மக்கள் மீது அக்கறை கொண்டவர்களாக தெரியவில்லை. இந்த நிலை மாற வேண்டும். நம் மக்களுக்காக பணியாற்றுகின்ற அதிகாரிகள் அடையாளம் காணப்பட வேண்டும்.

ஆகவே, புதுச்சேரி அரசும், காவல் துறையை தன்வசம் வைத்துள்ள உள்துறை அமைச்சர் அவர்களும் இத்துறை மீது அதீத கவனம் செலுத்த வேண்டும். பொறுப்புகள் பரவலாக பிரித்தளிக்கப்பட வேண்டும். காலிப்பணியிடங்கள் நிரப்ப வேண்டும். சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதில் சமரத்திற்கு இடம் அளிக்காமல் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தமிழக பட்ஜெட்டில் வேளாண்துறைக்கு ரூ.45,661 கோடி நிதி ஒதுக்கீடு!

# முதல்வரின் மூன்றாவது கண்ணாக விவசாயத்துறை இருப்பதாக விவசாயிகள் பெருமிதம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 19 -

தமிழக பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு ரூ.45,661கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன் மூலம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மூன்றாவது கண்ணாக விவசாயத்துறை இருப்பதாக விவசாயிகள் பெருமிதம் கொள்வதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

கல்வியும் மருத்துவமும் தான் திராவிட மாடல் அரசின் இரு கண்கள் என தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கடி பேசி வருவதோடு இல்லாமல் இரு துறைகளுக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து கண்காணித்து வருகிறார். மூன்றாவது கண்ணாக விவசாயத்துறையை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கருதுவதாக விவசாயிகள் பெருமிதத்தோடு எண்ணுகின்றனர். தமிழ்நாடு பட்ஜெட் டில் கல்வித்துறைக்கு ரூ.55,261 கோடியும், சுகாதாரத்துறைக்கு ரூ.21,906 கோடியும், விவசாயத்துறைக்கு ரூ.45,661 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

சமக்ரா சிக் ஷா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு வழங்கக்கூடிய 2,152 கோடி ரூபாயை சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து தமிழக அரசு விடுவித்துள்ளது குறித்து ஒன்றிய அரசுக்கு இப்போதாவது வெட்கம் வந்து, அவர்கள் நிதியை தருவார்கள் என நம்புகிறேன் என முன்னாள் ஒன்றிய நிதிய மைச்சர் ப.சிதம்பரம் கருத்து தெரிவித்து இருந்தார்.

பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் ரூ.46,767 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர், ஆசிரியர்களின் நலன் கருதி மாநில அரசே நிதியை விடுவித்துள்ளது. தமிழக அரசே தனது சொந்த நிதியிலிருந்து முக்கிய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் உள் கட்டமைப்புகளை மேற்கொள்ள ரூ.1,000 கோடி ஒதுக்கீடு, ரூ.275 கோடியில் மாணவியர் விடுதிகள், ரூ.50 கோடியில் 500 அரசுப் பள்ளிகளில் உயர்கல்வி குறித்து விழிப்புணர்வு பயிற்சி, காலை உணவுத் திட்டத்துக்காக ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல்வரின் காலை உணவுத் திட்டத்துக்கு பின்னர் பள்ளிகளில் மாணவர்கள் வருகை அதிகரித்துள்ளது. அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் வளர்ந்து வரும் துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் உருவாக்கப்படும். ரூ.152 கோடியில் 10 புதிய அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விரும்பும் வகையில் கைக்கணினி அல்லது மடிக் கணினி என பல தொலை நோக்கு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


தினகரன்
மார்ச் 18, 2025 செவ்வாய்க்கிழமை
முதல்வரின் மூன்றாவது கண்
கல்வியும் மருத்துவமும்தான் திராவிட மாடல் அரசின் இரு கண்கள் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கடி பேசி வருவதோடு இல்லாமல் இரு துறைகளுக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து கண்காணித்து வருகிறார். மூன்றாவது கண்ணாக விவசாயத்துறையை முதல்வர் மு.க.ஸ்டாலின் கருதுவதாக விவசாயிகள் பெருமிதத்தோடு எண்ணுகின்றனர். தமிழ்நாடு பட்ஜெட்டில் கல்வித்துறைக்கு ரூ.55,261 கோடியும், சுகாதாரத்துறைக்கு ரூ.21,906 கோடியும், விவசாயத்துறைக்கு ரூ.45,661 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளார்.
சமக்ரா சிக் ஷா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு வழங்கக்கூடிய 2,152 கோடி ரூபாயை சொந்த நிதி

இந்த பட்ஜெட்டில் சுகாதாரத்துறைக்கு ரூ.21,906 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முந்தைய 2024-25ம் நிதியாண்டில் ரூ.20,198 கோடி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில், இந்த ஆண்டு ரூ.1,708 கோடி அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு, அரசின் சுகாதார துறையின் மேம்பாட்டிற்கான உறுதிப்பாட்டை காட்டுகிறது.

வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். அதில் வரும் ஆண்டில் விவசாயி களுக்கு ரூ.17,000 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும்.

கடந்த 2019-20ம் நிதி ஆண்டில் 1.47 கோடி ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 3.23 லட்சம் ஏக்கர் அதிகரித்து, 2024-25ம் ஆண்டில் 1.50 கோடி ஏக்கராக உயர்ந்துள்ளது. 46 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்பாடு, 70 சதவீத மானியம் பெறும் வகையில் வேளாண் இயந்திரங்கள், கால்நடை வளர்ப்பு, மீன், தேனீ வளர்ப்பு உள்ளிட்டவற்றுக்கு ரூ.3 ஆயிரம் கோடி மூலதன கடன் வழங்கப்படும். 20 உழவர் சந்தைகளில் பசுமை காய்கறிகளை பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்தே ஆன்லைன் முறையில் பெற்றுக் கொள்ள, இணைய வர்த்தக தளத்துடன் இணைக்கப்படும். முதல்வரின் உழவர் நல சேவை மையங்கள், முந்திரி வாரியம், முதல்வரின் 'மண்ணுயிர் காத்து, மன்னுயிர் காப்போம்' திட்டம் விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மேலும் நெல் சாகுபடி பரப்பை அதிகரிக்க ரூ.160 கோடியில் சிறப்பு தொகுப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்பது உட்பட பல்வேறு அறிவிப்புகள் வெளியானது.

மொத்தத்தில் வேளாண் துறைக்கு ரூ.45,661 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு மூன்றாவது கண்ணாக விவசாயத்துறை இருப்பதாக விவசாயிகள் பெருமிதத்துடன் கூறுகின்றனர்.

இவ்வாறு அத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் அவலூர்பேட்டை நகர தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவலூர்பேட்டையில்நடைபெற்ற நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ரூ 5 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், அவலூர்பேட்டை நகர நிர்வாகிகள் நடராஜன், அர்ஷத், செல்வம் ,பாலு, மணியரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### அனைத்துத் தரப்பு மக்கள் - அனைத்து துறையின் சமச்சீர் வளர்ச்சியை கருத்தில் கொண்டும் உருவாக்கப்பட்டுள்ள

# தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை தொ.மு.ச. வரவேற்கிறது!

## பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, மார்ச் 19 -

தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தாபதி அவர்களின் சீரிய வழிகாட்டுதல் அடிப்படையில் நிதி அமைச்சர் 2005-26-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.



கடந்த பத்து ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனத்தால் சீர்கெட்டிருந்த நிர்வாகத்தை, செம்மைப்படுத்தியதோடு கழகத் தேர்தல் அறிக்கையில் கூறிய அடிப்படையில் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.4000/- வழங்கியது. போக்குவரத்தும் கழக நகரப் பேருந்துகளில் மகளிர் விடியல் பயணம், பால் விலையை லிட்டருக்கு ரூ.3 குறைத்தது, பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைத்தது. கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.1000, புதுமைப் பெண் திட்டம் மூலம் மாதம் ரூ.1000, தமிழ் புதல்வன் திட்டம் மூலம் மாதம் ரூ.1000, பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டித் திட்டம், இல்லம் நேடி கல்வி மக்களைத் தேடி மருத்துவம் போன்ற சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார் நம் முதல்வர்.

இத்தகைய சமூக நலத் திட்டங்களைத் தீட்டி வரும் நமது மாநிலத்தை வஞ்சிக்கும் வகையில் ஒன்றிய மோடி அரசு பகிர்வில் வஞ்சனை, திட்டங்களுக்கான நிநியை விடுவிக்க மறுப்பதும், பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு நிதி தர மறுப்பது, என வஞ்சனை போக்கோடு செயல்பட்ட போதும் முதல்வரின் சீரிய முயற்சியால் அதிமு.க. ஆட்சியில் இருந்த வருவாய் பற்றாக்குறையாக ரூ.65994 கோடி என்று இருந்ததை இந்தாண்டு நிதி நிலை அறிக்கையில் வருவாய் பற்றாக்குறை ரூ.41635 கோடியாக குறைத்து சாதனை படைத்துள்ளார். மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களும் சமச்சீர் வளர்ச்சியை உறுதிப்படுத்திட குன்றத்தூர், நத்தம். ஆலந்தூர், விக்கிரவாண்டி, செய்யூர், மானாமதுரை, முத்துப்பேட்டை, திருவிடைமருதூர், பெரம்பலூர் மற்றும் ஒட்டப்பிடாரம் உள்ளிட்ட இடங்களில் புதிய கல்லூரிகளில் கிருஷ்ணகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், மண்ணச்சநல்லூர், கோவை மாவட்டம் பேரூர், தருமபுரி மாவட்டம் காரியமங்கலம், மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் போன்ற இடங்களில் கட்டுமானத் தொழிலாளர் பிள்ளைகள் தொழிற்பயிற்சி பெற தொழிற்பயிற்சி நிலையம், சென்னை, கோவை, சூலூர், பல்லடம் பகுதிகளில் செமி கண்டக்டர் தொழில் பூங்கா, ஒசூர் டைடல் பூங்கா, கள்ளக்குறிச்சி சிப்காட் மூலம் காலணி திறன் பயிற்சி மையம், திருச்சி பொறியியல் வார்ப்பு பூங்கா, தூத்துக்குடி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பப் பூங்கா, கடலூர், புதுக்கோட்டை தொழில்நுட்பப் பூங்கா, ராமநாதபுரத்தில் விமான நிலையம் என பரவலாக அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சிக்கும் வழி கோலியுள்ளது இந்த நிதி நிலை அறிக்கை.

**வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!**

வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் விபத்தில் அரசு ஊழியர் மரணமடைந்தால் முழு ஊனம் அடைந்தால் 1 கோடி ரூபாய் வழங்க நடவடிக்கை, இயற்கை மரணமடைந்தால் 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் நிதிநிலை அறிக்கையில் விவசாய தொழிலாளர் விபத்து உயிரிழப்பு நிதி ரூ. 1 லட்சம் என்பதை ரூ. 2 லட்சமாக உயர்த்தியது. இணையம் சார்ந்த தற்சார்பு தொழிலாளர்களுக்கு ரூ.20,000 மானியத்தில் இரு சக்கர வாகனம், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தசை கூட்டு வலி உள்ளிட்ட தொழில் சார்ந்த நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 40 வயதுக்கு மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் அனைவருக்கும் முழு உடல் பரிசோதனை செய்யும் திட்டம் போன்றவை வரவேற்கத்தக்க அம்சங்களாகும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு செயல்பாட்டிள் அடிப்படையிலான ஊக்கத் தொகை வழங்குவதற்கு ரூ.2000 கோடியில் ஊக்க நிதியம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பும். செயல் திறன் இடைவெளித் தொகையாக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.646 கோடி ஒதுக்கியதும், மகளிர் விடியல் பயணத் திட்டத்திற்கு ரூ.3600 கோடியும், மாணவர் பேருந்து பயண கட்டணம் மானியம் 1782 கோடி ரூபாய், டீசல் மானியம் 1857 கோடி ரூபாய், புதிய பேருந்துகள் வாங்க ரூ.1031 கோடியும், பேருந்துகளை புதுப்பிக்க ரூ. 120 கோடியும் வழங்கப்படும் என்ற அறிவிப்பு போக்குவரத்துக் கழகங்களை நிதி இடர்பாட்டியிருந்து பாதுகாக்கும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 40,000 பணியிடங்கள் நிரப்பப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது. தமிழ்ட்டில் உள்ள பொதுத் துறை நிறுவன காலி பணியிடங்களை நிரப்பிடவும் முதல்வரை கேட்டுக் கொள்கிறோம்.

அரசு ஊழியர், ஆசிரியர் உள்ளிட்டவர்களுக்கு கொரோனா காலத்தில் பறிக்கப்பட்ட சரண்டர் விடுப்பு சலுகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் அந்த அறிவிப்பை இந்த ஆண்டிலேயே நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக வலுத்து வருகிறது. அதனை முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைக்கின்றோம்.

தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்த கிராமப்புற சாலைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு, முக்கிய இடங்களில் மேம் பாலங்கள் அமைப்பது, மாணவர்கள் போட்டித் தேர்வுகளை சந்திக்க முப்பது இடங்களில் முதல்வர் படைப்பகம் அமைப்பது, மாணவர்களுக்கு கல்விக் கடன், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் வழங்குவது போன்ற திட்டங்கள் கல்வியை ஊக்குவிக்கும் அறிவிப்பு.

**பாசிசப் போக்கு**

பத்திரப் புதிவு செய்கிற போது பெண்களுக்கு பதிவுக் கட்டணச் சலுகை போன்றவைகள் வரவேற்கத்தக்க அம்சமாகும். அதே போன்று சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும், மழைநீரை சேமிக்க சென்னையில் ஆறாவது நீர்த்தேக்கத்தை உருவாக்குவது. பூங்காக்களில் மழை நீரை உறிஞ்சும் அமைப்பை ஏற்படுத்துவது என்பது வெள்ள பாதிப்பை தடுக்கும் முன்னெச்சரிக்கையாகும். கால நிலை மாற்றம் போன்றவற்றை கருத்தில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஒன்றிய அரசு நமது மாநில கல்விக்கான நிதி 2152 கோடியை தர மறுத்ததை கணக்கில் நமது மாநில நிதியிலிருந்து அதனை ஈடுகட்ட மேற்கொண்ட நடவடிக்கை மாநில உரிமை மீது கைவைக்க நினைக்கும் பாசிசப் போக்கின் மீதான சம்மட்டி அடியாகும். இந்த நிதிநிலை அறிக்கை சமூகத்தின் அனைத்துப் பிரிவினையும், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்யக் கூடிய நிதிநிலை அறிக்கையாக உள்ளது.

நமது புராதன சின்னங்களை பாதுகாக்கவும், அவற்றை மேம்படுத்தவும் இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நமது நாட்டின் தொன்மையை பறைசாற்றும் அகழ்வாராய்ச்சியை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளதும் வரவேற்கத்தக்க அம்சமாகும். மூத்த குடிமக்களை பாதுகாக்க அன்பு இல்லம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பது மனித நேயத்தின் உச்சமாகும்.

முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டை புதிய கோணத்தில் வளர்த்தெடுக்க மேற்கொள்ளும் முயற்சிகளை இந்த நிதிநிலை அறிக்கை உறுதி செய்கிறது. தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு தொ.மு.ச. வரவேற்பு தெரிவிப்பதோடு உறுதுணையாக இருப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.என்.செல்வராஜ்

**மார்ச் 19 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் கொட்டையூர் பகுதியில் இருபது ஆண்டுகள் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நகர்மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

குடந்தை வாணி விலாச சபா செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.